## அரக்கோணம் நகராட்சி
## அவசர மன்ற கூட்ட அறிவிப்பு

கூட்ட எண்.42 நாள் 27.06.2019.

பொருள் : அவசர மன்றக் கூட்டம் – அரக்கோணம் நகராட்சி – நாள் 27.06.2019 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கூட்டம் நடைபெறுதல் – சம்மந்தமாக.

அரக்கோணம் நகராட்சி 27.06.2019 வியாழன் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஆணையாளர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் தலைமையில் நடைபெற உள்ள அவசர மன்ற கூட்டத்தில் கொண்டு வரப்படவுள்ள மன்றப்பொருள் விவரம்.

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்
அரக்கோணம் நகராட்சி

**பொருள் எண் :01**

நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரபெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல், நாள்.20.06.2019 ல் தமிழ் நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும்,அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.

நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைகேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும்,, தமிழ் நாடு நகராட்சி கணக்குப்பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 01.04.2013 அன்று சட்ட மன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ் நாடு நகராட்சி கணக்குப்பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்துக்கு அனுப்பி வைத்துள்ளன என்றும் அத்தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை(எம்எஸ்) எண் 26,நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை (எம்இ1) நாள் 10.02.2016ல் தமிழ் நாடு நகராட்சி கணக்குப்பணியமைப்பிற்கான பணி விதிகள்(Tamil Nadu Municipal Accounts Service Rules)2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரபெற்றுள்ள கடிதத்தில் தெரிக்கப்பட்டுள்ளது.

2) மேலும் தமிழ் நாடு நகராட்சி கணக்குப்பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதியதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம் ,வாலாஜாப்பேட்டை,வந்நவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrender) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07/07/2017 அன்று அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின்(Tamil Nadu Municipal Accounts Service Rules) கீழ் முதல்நிலை நகராட்சிகளுக்கு ஒவ்வொரு நகராட்சிக்கும் கீழ்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03/01/2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| முதுநிலை கணக்கர் | Senior Accountant | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு (Tamil Nadu Municipal Accounts Service Rules) பணியமைப்பில் கண்க்கு பணிக்கான பிரத்யேக பணியிடங்களை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி பொதுப்பணியில் (Tamil Nadu Municipal General Service ) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம்/ பணியிடங்களையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சியில் கீழ்கண்ட பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

Class IV கணக்கர் பணியிடம் ஒன்று மட்டும்

**அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.**

**(ந. க. எண்1451/2019/சி1)**

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**அரக்கோணம் நகராட்சி**